[1993 மார்ச் 23

148—

முசிறியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

*9705—திரு. எம். தங்கவேல் :
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

முசிறியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் திறக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
வாய்ப்பில்லை.

திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முசிறி வருவாய்க் கோட்டத் தலைநகரமாக இருக்கின்ற காரணத்தினாலே, திருச்சி மாவட்டத்தில் கரூரிலே ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இருக்கிறது. பெரம்பலூரிலே ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இருக்கிறது திருச்சியிலே ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இருக்கிறது. இந்த மூன்றும் கோட்ட வருவாய்த் தலைநகரமாக இருக்கின்ற காரணத்தினாலே முசிறி வருவாய்க் கோட்டத் தலைநகரமாக இருக்கின்ற காரணத்தினாலே அங்கேயும் ஒரு வட்டார அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முசிறி ஒரு தாலுக்கா தலைமையிடம். முசிறி குளித்தலையிலேயிருந்து 4 கி.மீ. தூரத்திலே உள்ளது. ஆகவே, குளித்தலையிலே புதிதாக ஒரு பகுதி அலுவலகம் ஒன்றைத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிற காரணத்தினாலே, முசிறியிலே அமைக்க சாத்தியக்கூறு இல்லை என்று நான் குறிப்பிட்டேன்.

திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முசிறி வருவாய்க் கோட்டத் தலைநகரம். Divisional Head Quarters, அந்தக் காரணத்தினாலேயும், முசிறியிலிருந்து குளித்தலை இரண்டு கிலோமீட்டர் தூரம் இருக்கின்ற காரணத்தினாலேயும் அந்த துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை குளித்தலையிலே திறப்பதற்குப் பதிலாக முசிறியிலே திறக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

1993 மார்ச் 23]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குளித்தலையிலே திறக்கப்பட இருக்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மீண்டும் பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முசிறியாக இருந்தாலும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, கோபியிலே வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது முசிறியைப் பற்றிய கேள்வி. நீங்கள் தனிக் கேள்வி போடவும். (குறுக்கீடு).

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறேன் என்றிருக்கிறார்கள். கோபியிலே வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் திறக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஏற்கனவே அங்கே இருந்த ஆய்வாளர் அலுவலகத்தை சத்தியமங்கலம் தாலுக்கா பகுதிக்கு மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதேனும் நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிதாக பகுதி அலுவலகம் அங்கே திறப்பதற்கு அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. சத்தியமங்கலத்தில் எதிர்காலத்திலே அந்தப் பகுதி அலுவலகம் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 149, திரு. ஆ. சுப்புரத்தினம், இருக்கையில் இல்லை.

வினா எண் 150, திரு. வெ. தமிழரசு, இருக்கையில் இல்லை.